அனுப்புனர் :
B . சிவராமன் B.A.,
53/210,கீரைத்தோட்டம்
திருச்சி மெயின் ரோடு,
தாதகாபட்டி.
சேலம் :636006.

07/12/2024

பெறுநர் :
பொது தகவல் அலுவலர் .
இயக்குநர்அலுவலகம் -பள்ளி கல்வித்துறை
சமக்ரா ஷிக்ஷா, P.A.K வளாகம் .
கல்லூரி சாலை. நுங்கம்பாக்கம்
சென்னை : 600009.

10 Rs.10 COURT FEE INDIA TEN RUPEES
RTI
நாள் :
80282
13/12/24

**தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 -ன் கீழ் கோரப்படும் தகவல்களை வழங்குமாறு பொது தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.**

**1.தமிழ்நாட்டில் மாநில பாடத்திட்டத்தின் கீழ் இயங்கும் ,**

(அ) -அரசு பள்ளிகளான - தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், ஆகியவைகளின் எண்ணிக்கைகளை தனித்தனி தகவலாக வழங்கவும் .

(ஆ) -அரசு நிதி உதவி பெறும் தொடக்கப்பள்ளிகள் / நடுநிலைப்பள்ளிகள் / உயர்நிலைப் பள்ளிகள் / மேல்நிலைப் பள்ளிகள், எண்ணிக்கைகளை தனித்தனி தகவலாக வழங்கவும்.

(இ) -சுயநிதி தொடக்கப்பள்ளிகள் / நடுநிலைப்பள்ளிகள் / உயர்நிலைப் பள்ளிகள், / மேல்நிலைப் பள்ளிகள், எண்ணிக்கைகளை தனித்தனி தகவலாக வழங்கவும்.

**2. மாநில பாடத்திட்டத்தின் கீழ் இயங்கும்,**

(அ) -அரசு பள்ளிகளில் பணியாற்றி வரும் இடைநிலை ஆசிரியர்கள் /பட்டதாரி ஆசிரியர்கள் /முதுகலை ஆசிரியர்களின் எண்ணிக்கையினை வழங்கவும்.

(ஆ) - அரசு நிதியுதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றி வரும் இடைநிலை ஆசிரியர்கள் /பட்டதாரி ஆசிரியர்கள்/ முதுகலை ஆசிரியர்கள். எண்ணிக்கையை வழங்கவும் .

(இ) -தனியார் சுயநிதி பள்ளிகளில் பணியாற்றி வரும் இடைநிலை ஆசிரியர்கள்/ பட்டதாரி ஆசிரியர்கள் /முதுகலை ஆசிரியர்களின் எண்ணிக்கையை வழங்கவும்.

**3.கடந்த 2021-22, 2022 -23, 2023 -24, வரையிலான கல்வி ஆண்டுகளில் அரசு பள்ளிகளில் ,**

(அ)-ஒழுங்கு நடவடிக்கைக்குள்ளான ஆசிரியர்களின் எண்ணிக்கையினை வழங்கவும்.

(ஆ) - பாலியல் புகார்களுக்குள்ளாகி ஒழுங்கு நடவடிக்கைக்கு ட்படுத்தப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களான மாவட்டம் /பள்ளியின் பெயர்/ ஆசிரியர்களின் பெயர்/ எண்ணிக்கை)

(இ) -மாணவ, மாணவியர்களிடம் பாலியல் சீண்டல்களில் ஈடுபட்டு ஒழுங்கு நடைவடிக்கைகளுக்குள்ளான ஆசிரியர்களின் விவரங்களான மாவட்டம்/ பள்ளி பெயர்/ ஆசிரியரின் பெயர் மற்றும் எண்ணிக்கையினை தகவலாக வழங்கவும்.

4. கடந்த, 2021- 22, 2022 -23, 2023 -24 ஆகிய கல்வி ஆண்டுகளில் அரசு நிதி உதவி பெறும் அனைத்து வகை பள்ளிகளிலும், பணியாற்றும் ஆசிரியர்களில் எத்தனை பேர் பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி , ஒழுங்கு நடவடிக்கைகுட்படுத்தப்பட்டுள்ளனர் குறித்த விபரங்களை வழங்கவும்.

5. 2021 முதல்2024 கல்வி ஆண்டுகளில், அனைத்து வகை அரசு பள்ளிகளில் பணியாற்றி வரும்

(அ) -ஆசிரியர்களில் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கையை தகவலாக வழங்கவும். மற்றும்

(ஆ) பாலியல் குற்றச்சாட்டு காரணமாக பணி யிடைநீக்கம் மற்றும் நிரந்தர பணி நீக்கம்செய்யப்பட்ட ஆண் /பெண் ஆசிரியர்கள் எத்தனை பேர் குறித்த தகவல்களை வழங்கவும்.

மேலே கோரப்படும் தகவல்களை பெற(₹10) ரூபாய் பத்து மதிப்பிலான கோர்ட் ஸ்டாம்ப் இத்துடன் ஒட்டப்பட்டுள்ளது.

இப்படிக்கு,

B. Sivaraman

(சிவராமன்.B )

7/12/2024